
கிழவரும் கதவும்

கேரி சோடோ

தமிழில் கிருஷ்ணன்



கிழவரும் கதவும்

கேரி சோடோ

தமிழில் கிருஷ்ணன்



மெக்ஸிகோ மொழியில் “லா போர்டோ” என்றால் கதவு “எல் போர்க்கோ” என்றால் பன்றி. மாலை விருதுக்காக “எல் போர்க்கோ - பன்றி கறி” வாங்கி வர சொன்னதை தவறாக புரிந்து கொண்டு “லா போர்ட்டோ- கதவை” விருந்துக்கு கொண்டு வந்த கிழவரின் சுவாரசியமான கதை.




இந்த வயதிலும் தோட்டத்தில் காய்கறிகளை விளைவித்து அசத்தும் கிழவர் அவர்.

அவருடைய தோட்டத்தின் ஸ்பெஷல் பெரிய தக்காளியும் , காரமான மிளகாயும் தான். அவர் வளர்த்த கோழிகள் பெரியதாகவும் வெள்ளையாகவும், அவருடைய பன்னிகள் கொழுக் மொழுக்கென்று குண்டாகவும் இருந்தன. கிழவர் விவகாரமானவர். தன் மனைவி எப்போது கூப்பிட்டாலும் தோட்டத்திற்குள் ஓடி போய் மண்வெட்டியை எடுத்து கொண்டு ஏதோ வேலை செய்வதை போல் பாவனை செய்வார். மாலை இரவு உணவின் போது மனைவியிடம் ஏதாவது சொன்னியா? என்று ஒன்னும் தெரியாதவர் போல கேட்பார்.

ஒரு சனிக்கிழமை தன் நாய் கோகோ வை குளிக்க வைத்து கொண்டிருந்தார். அந்த நேரம் அவர் மனைவி நல்ல ஒரு ஆடையை அணிந்து கொண்டு வெளியே வந்தார். அவர் அவருடைய சினேகிதியின் வீட்டிற்கு விருந்தொன்று க்கு புறப்பட்டு கொண்டிருந்தார். கிழவரை பார்த்து “ரொம்ப நேரம் கெடத்தாதீங்க” என்றார். “இல்லை இதோ.. இப்போ… முடித்து விடுவேன்” என்று இழுத்தார் கிழவர்.






இது தான் சமயம் என்று கோகோ தொட்டியில் இருந்து குதித்து ஓட தொடங்கியது. உடம்பு முழுவதும் சோப்பு நுரை நிரம்பியிருந்தது. கிழவரும் சோப்பு, பிரஷ் எல்லாத்தையும் கீழே போட்டு விட்டு ஓடத் தொடங்கினார். அதன் பின் வீட்டை மூன்று முறையும், அவோகாடோ மரத்தை ஒன்பது தடவையும் இருவரும் சுற்றி வந்து விட்டனர். ஓட்டத்திற்கு நடுவில் கோழி, பண்ணி எல்லாவற்றிற்கும் மிதியும் கிடைத்தது.

இந்த அமர்களத்திற்கு நடுவில் கிழவரின் மனைவி "விருந்துக்கு பன்றி கறியை வாங்கிட்டு வந்திடுங்க" என்று கத்தி கொண்டு அங்கும் இங்குமாய் ஓடி சொல்லி கொண்டிருந்தார். "என்ன சொல்வது காதில் விழுந்ததா மறந்திடாதிங்க" என்று கிழவரிடம் சொன்னார்.

“சரி.. சரி என் காதில் விழுகிறது” என்று சொல்லி கொண்டே கோகோவின் பின் ஓடி கொண்டிருந்தார் கிழவர். கடைசியாக தக்காளி தோட்டத்தில் கோகோவை பிடித்து விட்டார் கிழவர். பின் அதை வீட்டுக்கு இழுத்து வந்தார்.

கிழவரின் மனைவிக்கு தலையே சுற்றி விட்டது. கதவை மூடி விட்டு “நீங்களாச்சு உங்க நாயாச்சு ன்னு” அவர் கிளம்பி விட்டார்.






கிழவர் கோகோவை திரும்பவும் குளிக்க வைத்தார். குளியல் முடிந்தவுடன் தான் அவர் மனைவி "என்னோவோ வாங்கி வர சொன்னாரே" என்று மண்டையை சொரிந்தார். "லா போர்ட்டா - கதவை எதற்கு விருந்துக்கு வாங்கி வர சொன்னாள்?" என்று குழப்பமடைந்தார்.




ஆனால் அவர் மனைவி சொல்லை தட்டுப்பவர் இல்லை. அதன் விளைவு அவருக்கு நன்றாக தெரியும். அதனால் மேலும் யோசிக்காமல் முன் கதவை கழட்டி கொண்டு தன் தோளில் போட்டு கொண்டு கிளம்பினார்.



ஒரு மைல் நடந்த பின்னர் சற்று இளைப்பாறுவதற்காக நின்றார். அங்கு ஒரு சிறிய ஏழை வீடு இருந்தது. ஒரு இளம் வயது பெண் அவளுடைய தங்கையை அழுவதிலிருந்து சமாதானம் செய்து கொண்டிருந்தாள். “என்ன ஆச்சு தங்க குட்டிக்கு..” என்றார் கிழவர்.

“என் தங்கைக்கு அவள் விளையாடுவதற்கு ஒன்னும் இல்லையாம், அவளுடைய விரல்களையும், பை ஓட்டையையும் தவிர, அதனால் தான் அழுகிறாள்” என்றாள் அந்த இளம்பெண். “இவ்வளவு தானா” என்று கிழவர் கூறி அவள் தலையை தடவி கொடுத்தார்.




கிழவருக்கு அக்குழந்தையை மகிழ்விக்க ஒரு யோசனை வந்தது. அவளை அப்படியே தூக்கி தன் முதுகில் இருந்த கதவின் மறுபக்கம் நிற்க வைத்தார்.


"கண்ணா மூச்சி ரே ரே .. கண்ணா மூச்சி ரே ரே .." என்று அவளை பார்த்து கூவி கொண்டே அவளிடம் விளையாட தொடங்கினர். அந்த குழந்தையும் அதை கேட்டவுடன் மழிழ்ச்சியடைந்தது. சிரித்து கொண்டே கிழவருக்கு ஒரு முத்தம் கொடுத்தது.

மீண்டும் கிழவர் விசில் அடித்தும், வழியில் இருக்கும் கற்களை எட்டி உதைத்தும் நடந்து கொண்டிருந்தார். சாலையில் ஒருவரும் இல்லை, நீல வண்ண வானமும் பெரிய தொப்பியை போல விரிந்திருந்தது.
ஒரு மரத்தின் கீழே வரும்போது, அவர் தூக்கி வந்த கதவு தட்டி ஒரு தேன் கூடு கலைந்து போனது.
கிழவரை தேனீக்கள் கோபத்துடன் கொட்ட ஆரம்பித்தது.

“ஐயோ.. ஐயோ” என்று கத்தி கொண்டே தப்பிக்க இங்கும் அங்கும் ஓடினார் கிழவர். அவர் கால்கள் அயர்ந்து போயின. மூச்சு வாங்கிக் கொண்டே “இருந்தாலும் இந்த தேனீக்கள் மிகவும் வேகமாக தான் பறக்கின்றன” என்று அலுப்புடன் படுத்தே விட்டார். கதவு அவரை தேனீக்களின் கடியிலிருந்து காப்பாற்றியது. சிறிது நேரம் கழித்து கதவின் ஓட்டை வழியாக பார்த்தார். வெறும் சதுரமான நீல வானம் மட்டுமே தெரிந்தது.



“ஒரு வழியா தப்பிச்சோம்” என்று சொல்லிக்கொண்டே எழுந்தார் கிழவர். தேன்கூட்டில் தேன் இருப்பதை பார்த்தார். “இது வீணா போயிடும்” என்று கூறிக்கொண்டு தேனை தன் தொப்பியில் இறக்கி கொண்டார். கதவின் மேல் தொப்பியை வைத்து கொண்டு நடக்க தொடங்கினார்.







சிறிது நேரத்திலேயே வாத்து ஒன்று கதவில் மேல் வந்து உட்கார்ந்தது. வாத்து இறகு கனமாக இருந்ததால் கிழவருக்கு சுமை கூடியது. “என் கதவின் மேல் சற்று ஓய்வு எடு. எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் நீ வரலாம் அது உன்னுடைய விருப்பம்.” என்று வாத்திடம் கூறினார் கிழவர்.

வாத்து “நன்றியுடன் வாக்.. வாக்..” என்று கத்தியது. ஒரு மைல் தூரம் வாத்து கிழவரின் கதவு மேல் அமர்ந்து வந்தது. கிழவர் ஒரு இடத்தில் ஓய்வு எடுப்பதற்காக அமர்ந்தார். வாத்து தன் சிறகை அடித்து பறந்து விட்டது. கிழவர் தன் நெத்தி வேர்வையை தொடைத்து கொண்டு கதவின் மேல் ஏதோ இருப்பதை பார்த்தார்.


“என்னவாக இருக்கும்” என்று நினைத்து கொண்டு தொட்டு பார்த்தார். வாத்து முட்டை வைத்து விட்டு போய் இருப்பதை உணர்ந்தார். கையில் எடுத்து பார்த்தால் முட்டை நல்ல கனமாக இருந்தது.

“நான் அதிர்ஷ்டசாலி தான்” என்று சொல்லி சிறித்து கொண்டார்.






கதவை தூக்கி கொண்டு மீண்டும் நடக்க தொடங்கினார். சிறிது தூரமே போயிருப்பார் ஏதோ சத்தம் கேட்பதை உணர்ந்தார். பக்கத்து ஏரியிலிருந்து வருவதை கவனித்தார். கையை கண்ணில் படும் வெளிச்சத்தை மறைத்து தண்ணீரின் பக்கம் பார்த்தார். “காப்பாத்துங்க.. காப்பாத்துங்க..” என்று ஒரு சிறுவன் கத்துவதை பார்த்தார்.





வேகமாக ஏரிக்கு ஓடினார் கிழவர். கதவை தண்ணீரில் தூக்கி எறிந்தார். அதில் ஏறி படகு போன்று மிதக்க செய்தார். சிறுவனை அதில் ஏற்றிக்கொண்டு ஏரிக்கரைக்கு வந்து சேர்ந்தார். இருவரும் மூச்சு வாங்க கதவின் மேல் உட்கார்ந்திருந்தனர். ஒரு தவளை கிழவரின் சட்டையில் இருந்து வெளியேறியது. ஒரு மீன் பாக்கெட்டிலிருந்து குதித்தது.

மீண்டும் மீண்டும் அந்த சிறுவன் கிழவருக்கு நன்றி கூறினான். “இனி நீச்சல் கற்றுக்கொள்ளும் வரை நீந்தமாட்டேன், உன் பெற்றோரின் சொல்படி கேட்பேன் என்று” எனக்கு சத்தியம் பண்ணு என்று கிழவர் சிறுவனிடம் கேட்டார்.
ஒரு இலையை கொண்டு அச்சிறுவனின் முகத்தை துடைத்து விட்டார் கிழவர். அவன் சட்டை பாக்கெட்டில் இருந்த ஒரு மீனையும் வெளியே எடுத்தார். அதை அவர் பாக்கெட்டில் போட்டு கொண்டார்.



சிறுவனிடம் விடைபெற்றுக் கொண்டு கிழவர் தண்ணீரில் நினைந்த கதவை எடுத்து கொண்டு நடக்க ஆரம்பித்தார். விருந்துக்கு நேரம் ஆகிவிட்டதை உணர்ந்தார். மனைவி கோபமாக இருப்பார் என்று அவருக்கு தெரியும். கொஞ்ச நேரம் நடந்தவுடன் ஒரு இளைஞர் பொருட்களை ஒரு வேனில் ஏற்றி கொண்டிருப்பதை பார்த்து அவருக்கு உதவி செய்ய போனார் கிழவர்.






“இதோ இந்த கதவை பொருட்களை ஏற்றி கொள்ள உபயோகித்துக் கொள்ளுங்கள்” என்றார் கிழவர். கதவை வேனின் மேல் சாய்த்து வைத்தார். நாற்காலி, மேஜை ஒரு பெரிய பியானோ அனைத்தையும் ஏற்ற உதவினார். டிங்..டிங்.. என்ற சத்தம் கேட்டது பியானோவை ஏற்றும்போது.

“மிக்க நன்றி பெரியவரே” என்று கூறினார் அந்த இளைஞர்.
“பரவாயில்லை ஒரு கதவு இவ்வளவு உதவியாக இருக்கும் என்பதை இன்று தான் உணர்ந்தேன்.” என்றார் கிழவர்.
கதவை கிழவரின் முதுகில் ஏற்றுவதற்கு இளைஞர் உதவினார். மேலும் இரண்டு பெரிய தர்பூசணி பழங்களை கதவின் மேல் இரண்டு பக்கமும் விழுந்து விடாதபடி வைத்தார். “இது என் தோட்டத்தில் விளைந்தது” என்று கூறினார் இளைஞர்.






நண்பர் வீட்டிற்கு எல்லா பரிசு பொருட்களையும் எடுத்து கொண்டு விரைந்தார் கிழவர். பார்ட்டி தோட்டத்தில் நடந்தது. பாட்டு ஒலித்துக் கொண்டிருந்தது.
“நான் வந்துவிட்டேன்” என்று எல்லோருக்கும் உரக்க அறிவித்தார். கதவை தன் தோளிலிருந்து இறக்கினார்.

“ஐயோ ! என்ன பண்ணிக்கிட்டு இருக்கீங்க நம்ம வீட்டு கதவை இங்கே ஏன் கொண்டு வந்திருக்கீங்க” என்று அலறினார் அவரது மனைவி.
நீ தான கதவை கொண்டு வர சொன்ன… என்று வியர்வை துடைத்து கொண்டு சொன்னார் கிழவர். என்ன ஒரு கடினமான வேலை தெரியுமா என்றார்.
நான் உங்களை கொண்டு வர சொன்னது “எல் போர்க்கோ - பன்றி கறி” “லா போர்ட்டோ- கதவை” அல்ல என்றார் அவரது மனைவி. அவர் தோழியிடம் “பார்த்தாயா இந்த மனுஷனை பன்றி கறியை வாங்கி வர சொன்னால் அவர் வீட்டு கதவை தூக்கிகிட்டு வந்திருக்கார்!”






கிழவர் சிறித்து கொண்டே பாக்கெட்டிலிருந்து வாத்து முட்டையை எடுத்து மனைவியிடம் கொடுத்தார். “இன்னும் என்னென்ன நான் கொண்டு வந்திருக்கேன்னு” பாரு என்றார் கிழவர்.
“ஐயோ!” என்று வியப்புடன் கூவினாள் மனைவி
“ஆமாம் ஒரு முட்டை, தேன், மீன், மற்றும் தர்பூசணி ஒரு முத்தமும் கூட” என்று அந்த குழந்தையின் முத்தத்தை தன் மனைவிக்கு தந்தார் கிழவர்.
“இதெல்லாம் நீங்க வாங்கி வந்தீங்களா” என்று அன்புடன் சிரித்தார் அவரது மனைவி
“அது ஒரு பெரிய கதை” என்றார் கிழவர்
“சரி விருந்து உண்ணும் போது இந்த கதையை சொல்லுங்களேன்” என்றார் இதை கேட்டு கொண்டிருந்த நண்பர்.



மீன் வருவலானது, முட்டை அவிக்க பட்டது, தர்பூசணி வெட்டப்பட்டது.

கதவு மேஜை ஆக்கப்பட்டது. அதில் தேன் இருந்த தொப்பியை நடுவில் வைக்கப்பட்டது. பார்ட்டி ஜோராக நடந்தது.



“எல் போர்க்கோ - பன்றி கறி” “லா போர்ட்டோ- கதவு”
இந்த இரண்டுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை கிழவருக்கு.